இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 05-04-2025

# சட்ட நெறிமுறைகள் மீதான தாக்குதல்

இவ்வளவு எதிர்ப்புகளையும் மீறி வக்பு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி இருப்பது பா.ஜ.க.வின் அப்பட்டமான எதேச்சதிகாரத் தன்மை ஆகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும், அந்தச் சட்டம் வலியுறுத்தும் நெறிமுறைகளின் மீதும் நடத்தப்பட்ட மாபெரும் தாக்குதல் இது. எது தாக்கப்பட்டால் என்ன, 'நமது அஜெண்டா நிறைவேறினால் போதும்' என்று நினைக்கும் நபர்களின் கையில் இந்திய நாட்டின் ஆட்சி அதிகாரம் சிக்கி இருப்பது மிக மோசமான காலக்கட்டத்தில் இருக்கிறோம் என்பதை நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது.

**நள்ளிரவில் நிறைவேறி இருக்கிறது வக்பு திருத்தச் சட்டம். நள்ளிரவில் நிறைவேறி இருப்பதே இதன் இருள் தன்மையை உணர்த்துகிறது. இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு பா.ஜ.க.வுக்கு தனிப்பட்ட செல்வாக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அந்தக் கட்சி, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைக்குத் தேவையான 272 இடங்களைக் கைப்பற்ற முடியாத கட்சியாகும். ஆந்திராவில் சந்திரபாபு, பீகாரில் நிதிஷ்குமார் ஆகியோர் தயவோடுதான் கூட்டணி ஆட்சியை அமைத்துள்ளார் மோடி.**

400 வெல்வோம், 370 வெல்வோம் என்று சொன்ன மோடி, 240 தான் வென்றார். என்ற அடிப்படையில் பா.ஜ.க. 'மைனாரிட்டி ஆட்சி'யைத் தான் நடத்தி வருகிறது. இதை வைத்துத்தான் இந்த ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏப்ரல் 2 நள்ளிரவில் "ஒற்றுமை வக்ஃப் மேலாண்மை, திறன் மற்றும் மேம்பாடு (UMEED)" என்ற புதிய மசோதாவை மக்களவையில் நிறைவேற்றி விட்டார்கள். 288 உறுப்பினர்கள் இந்த மசோதாவை ஆதரித்திருக்கிறார்கள். 232 பேர் எதிர்த்து வாக்களித்துள்ளார்கள். இரண்டுக்கும் வேறுபாடு 56 வாக்குகள் தான். ஒரு வாக்கு கூடுதல் என்றாலும் வெற்றிதான். ஆனால் தார்மீக அடிப்படையில் பார்த்தால் இந்திய நாடாளு மன்றத்தில் பாதிக்கும் சற்று குறைவான எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களால் எதிர்க்கப்பட்டுள்ளது - நிராகரிக்கப் பட்டுள்ளது - ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளது.

ஆந்திர சந்திரபாபுவும், பீகார் நிதிஷ்குமாரும் 'வக்பு சட்டம் நல்லது' என்பதற்காக ஆதரிக்கவில்லை. பா.ஜ.க.வை ஆதரிப்பதால், வக்பு சட்டத்தையும் ஆதரித்து வாக்களித்துள்ளார்கள்.

இதே போல் மாநிலங்களவையில் ஏப்ரல் 3 நள்ளிரவில் நிறைவேற்றி இருக்கிறார்கள். மசோதாவுக்கு ஆதரவாக 128 வாக்குகள் பதிவாகி உள்ளன. மசோதாவுக்கு எதிராக 95 வாக்குகள் பதிவாகி உள்ளன. வேறுபாடு 33 வாக்குகள்தான். 95 உறுப்பினர்களால் இந்த மசோதா எதிர்க்கப்பட்டுள்ளது - நிராகரிக்கப்பட்டுள்ளது - ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளது.

சில பத்து வாக்குகள் கூடுதலாக இருக்கிறது என்பதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் மீது தாக்குதல் நடத்துவீர்களா? அரசியலமைப்புச் சட்டத்தையே நீர்த்துப் போகச் செய்வீர்களா? மத நல்லிணக்கத்தைச் சிதைப்பீர்களா? சிறுபான்மையினரை இழிவுபடுத்துவீர்களா? சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிப்பீர்களா?

இந்தச் சட்டம் குறித்து சிறுபான்மை அமைப்புகளுடன் விவாதங்கள் நடத்தப்பட்டதா? 1955ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் போது இத்தனை ஆண்டுகாலச் செயல்பாடுகள் மீது விசாரணை நடத்தப்பட்டதா? சிறுபான்மையினருடன் கருத்து கேட்கப்பட்டதா?

2023 ஆம் ஆண்டு சிறுபான்மையின ஆணையக் கூட்டம் நான்கு முறை நடந்துள்ளது. அந்தக் கூட்டத்தில் ஒருமுறையாவது இது தொடர்பாக விவாதிக்கப்பட்டதா என்றால் இல்லை? அதனால்தான் இதனை, 'கருப்புச் சட்டம்' என்கிறது அகில இந்திய முஸ்லீம் தனிநபர் சட்ட வாரியம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சிறுபான்மையினருக்கான மத, கல்வி, பண்பாட்டு உரிமைகளைப் பாதுகாக்கிறது. ஆனால் வக்பு சட்டம் அதனைச் சிதைக்கிறது.

**வக்பு சட்டம் எந்த நோக்கத்துக்காகக் கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கத்தைச் சிதைப்பதற்காகத்தான் இப்போதைய திருத்தச் சட்டம் வந்துள்ளது. வக்பு ஆணையத்துக்கு வழங்கப்பட்ட தனி அதிகாரத்தை ஒழித்து, அந்தச் சட்டத்தையே காலப்போக்கில் இல்லாமல் ஆக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் வந்துள்ளது. இசுலாமியர்களின் சொத்துக்களைக் குறிவைத்துப் பறிக்கவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. 'முஸ்லிம் சமுதாயத்தின் சொத்துக்களைக் கைப்பற்றும் முயற்சிதான் இந்தச் சட்டம்' என்று முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் சொல்லி இருக்கிறது.**

**இந்தச் சட்டம் தொடர்பாக பதில் அளித்த ஒன்றிய சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜூ, 'பாதுகாப்புத் துறை, ரயில்வே துறைக்கு அடுத்து வக்பு சட்டத்தில்தான் அதிகமான சொத்து இருக்கிறது' என்பதை திரும்பத் திரும்பச் சொல்கிறார். அவரது உண்மையான நோக்கம் இதன் மூலம் தெரிகிறது. 'எதற்காக இவ்வளவு சொத்தை வைத்திருக்கிறீர்கள்?' என்பதுதான் அவரது வஞ்சக எண்ணமாக உள்ளது. 12 ஆம் நூற்றாண்டில் இருந்து, இருந்துவரும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைக்கிறது பா.ஜ.க. ஏனென்றால் பா.ஜ.க., சிறுபான்மையினருக்கு எதிரானது. சிறுபான்மை இசுலாமியர்களுக்கு எதிராகத் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் கட்சி பா.ஜ.க. அந்தக் கட்சியின் இருப்பு என்பதே இசுலாமிய வெறுப்புதான். அது மட்டும்தான்.**

**"அரசியலமைப்பு உயர்வாக இருந்தாலும் அதனைச் செயல்படுத்துபவர்கள் மோசமானவர்களாக இருந்தால் அரசியலமைப்பு மிக மோசமானதாக ஆகிவிடும். மோசமான அரசியலமைப்பைச் செயல்படுத்துவபர்கள் நல்லவர்களாக இருந்தால் மோசமான அரசியலமைப்பும் நல்லதாகிவிடும். நாட்டிற்கும் மேலானதாக மதத்தை அரசியல் கட்சிகள் போற்றினால் நமது சுதந்திரம் இரண்டாவது முறையாக இன்னலுக்கு ஆட்பட நேரிடும். இன்னல்கள் நேருமானால் கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும் வரை நமது சுதந்திரத்தைக் காப்போம் என்ற உறுதிமொழியை மேற்கொள்ள வேண்டும்" என்று அன்றே சொன்னார் அண்ணல் அம்பேத்கர்.**

அத்தகைய உறுதிமொழிக்கு ஏற்பவே, ஒன்றிய அரசின் வக்பு சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இன்றைய வக்பு சட்டமாக இருந்தாலும், குடியுரிமைத் திருத்தச் சட்டமாக இருந்தாலும் இதன் நோக்கம் இசுலாமியர்களைக் குறி வைப்பதுதான். CAA, NRC, மதரஸா சட்டம், ஒரே குடியியல் சட்டம் (UCC), காஷ்மீரைப் பிரித்தது, 370 நீக்கம், பாபர் மசூதி இடிப்பு போன்றவை அனைத்தும் பா.ஜ.க.வின் செயல்முறைத் திட்டத்தின் வெளிப்பாடுகள்தான். இவை குறிப்பிட்ட மத மக்களுக்கு எதிரான தாக்குதலாகச் செய்கிறார்கள். ஆனால் உண்மையில் இந்தியாவின் மீதான தாக்குதலாகத்தான் இவை அமைந்துள்ளன. இவை அனைத்துக்குள்ளும் அச்சுறுத்தல் மட்டுமே அடங்கி இருக்கிறது.

---

### கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியது –

# இந்திய அரசியல் சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது!

## கச்சத்தீவை உடனே மீட்கக் கோரி – மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஏப். 5-

1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் ஒப்புதல் இல்லாமலேயே கச்சத்தீவை இந்திய அரசு இலங்கைக்கு இருநாடுகள் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாகத் தாரை வார்க்கப்பட்டது. கச்சத்தீவு தமிழ்நாட்டின் கைவிட்டுப் போன பிறகு தமிழக மீனவர்கள் கச்சத்தீவு கடல் பகுதிக்கு மீன்பிடிக்க செல்ல போகும் போதெல்லாம் அவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி அவர்களைக் கைது செய்து சிறைகளில் அடைப்பதையும் படகுகள், மீன்கள் உள்ளிட்ட உடைமைகளை கைப்பற்றிச் செல்வதும் தொடர்கதை ஆகி விட்டது. அண்மைக் காலங்களில் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களும் சிறைவைப்பு போன்ற தண்டனைகளும் அதிகமாகி விட்ட நிலையில் கச்சத்தீவை மீட்பது ஒன்றே இந்த நெடுநாள் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு என்ற குரல் தமிழ்நாடு மீனவ சமுதாய மக்கள் மட்டுமல்லாமல் அரசியல்



கட்சிகளிடமிருந்தும் உரக்க ஒலித்து வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (3.4.2025) தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கச்சத்தீவு தொடர்பான பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பினார். 1974ல் இந்திய அரசு, கச்சத்தீவை இலங்கைக்கு நாடாளுமன்றத்தின் முன் ஒப்புதல் பெறாமல் கொடுத்தது இந்திய நாட்டின் அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரான செயல் என்பதால் கச்சத்தீவை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று தனது பேச்சில் டி.ஆர் பாலு வலியுறுத்தினார்.

தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் உரையின் விவரம் வருமாறு:-

இன்று தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களால் முன்மொழியப்பட்ட கச்சத்தீவு அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக இலங்கைக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட விஷயம் சம்பந்தப்பட்ட தனித்தீர்மானம் தமிழ்நாடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப் பட்டது.

கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்ட செயல் அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது என்று ஏன் சொல்கிறேன்? இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே 1974 ல் இரு நாடுகளின் இடையிலான சர்வதேச கடல் எல்லைக் கோடு (இன்டர்நேஷனல் மேரிட்டைம் பவுண்டரி லைன்) தொடர்பாக ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. பின், 1976 ஆம் ஆண்டில் இரு நாட்டுக் கடல் எல்லைக் கோட்டின் புள்ளிகள் உறுதி செய்யப்பட்ட மேலும் ஒரு ஒப்பந்தம் இருநாடுகளிடையே ஏற்கப்பட்டது. ஆனால், இவ்விரு ஒப்பந்தங்களிலும் தமிழ்நாடு அரசுக்கு எந்தப் பங்கும் இல்லை.

**உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு!**

இந்தப் பிரச்சினை குறித்து மேற்கொண்டு எந்தக் கருத்தையும் சொல்வதற்கு முன்னால் ஒரு உண்மை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அன்றைய பாகிஸ்தானுக்கு மேற்குவங்கத்தில் உள்ள பேருபாரி பகுதியின் நிலப்பரப்பை மாற்றுவது தொடர்பான வழக்கில் 1960 ஆம் ஆண்டில் இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் இந்திய நிலப் பகுதியை வேறு நாட்டுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் கொடுக்க முடியாது என்று கூறியுள்ளது.

1976 ல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி கச்சத்தீவு இலங்கைக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட போது தமிழ்நாடு குடியரசுத் தலைவர் ஆட்சியில் இருந்த நிலையில் தமிழ்நாடு அரசுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை. மேலும் நாடாளுமன்ற ஒப்புதலும் பெறப்படவில்லை. அதனால்தான் கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்த நடவடிக்கை அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்று குறிப்பிட்டுக் கூறுகிறேன்.

தலைவர் அவர்களே! கச்சத்தீவு என்பது தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமாக அன்றாட உயிர் பிழைப்புக்கு ஆதாரமானது. சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கே அவையில் உள்ளார். அவர் இந்த விவரங்களை எல்லாம் வெளியுறவு அமைச்சருக்கும் பிரதமர் மோடி அவர்களுக்கும் விளக்கிட வேண்டும். கச்சத்தீவை மீட்க விரைவான நடவடிக்கைகளை எடுக்க உதவிட வேண்டும்."

இவ்வாறு தி.மு.க. பொருளாளரும் கழக மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு தனது உரையில் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

---

### சிவகாசி - சாத்தூர் - கோவில்பட்டி பகுதிகளில் உற்பத்தியாகும்

# தீப்பெட்டிகளுக்கு 'புவிசார் குறியீடு' பெறும் திட்டம்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளக்கம் !

**சென்னை, ஏப்.5-**

**சட்டப்பேரவையில் சிவகாசி தொகுதி உறுப்பினர் க.அசோகன், "சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளுக்கு புவிசார் குறியீடு பெறுதல்" குறித்து கோரிக்கை விடுத்தார்.**

**அதற்கு விளக்கமளித்து - குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் உரையாற்றினார்.**

*அவர் குறிப்பிட்டதாவது:*

*சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளுக்கு புவிசார் குறியீடு பெறும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை தங்களின் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். புவிசார் குறியீடு என்பது ஒரு பொருளுக்கு வழங்கப்படும் அறிவுசார் சொத்து உரிமையாகும். புவிசார் குறியீடானது வேளாண் பொருள்கள், உணவு பொருள்கள், கைவினை பொருள்கள் உற்பத்தி சார்ந்த பொருள்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அளவில் 64 பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற்று தமிழ்நாடு 2ஆம் இடத்தில் உள்ளது.*

*கும்பகோணம் வெற்றிலை, தோவாளை மாணிக்க மாலை, பண்ருட்டி பலாப்பழம் முந்திரி, புளியங்குடி எலுமிச்சை, விருதுநகர் சம்பா வத்தல், இராமநாதபுரம் சித்திரை கார் அரிசி, பெரம்பலூர் செட்டிக்குளம் சின்ன வெங்காயம் ஆகியவற்றுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.*

*ஒரு பொருளுக்கு புவிசார் குறியீடு பெற வேண்டும் என்றால், அப்பொருள் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து தோன்றிருக்க வேண்டும். அதற்கான வரலாற்று சான்றும் இருக்க வேண்டும். அப்பொருள்களுக்கும் அப்பகுதிக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உள்ள தொடர்பு உறுதிபடுத்தப்பட வேண்டும் தீப்பெட்டி தொழிலை பொருத்தமட்டில் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் மற்றும் சிவகாசி பகுதிகளில் 566 நிறுவனங்களும் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில், சுமார் 400 நிறுவனங்களும், தீப்பெட்டி உற்பத்தி செய்து வருகின்றன.*



*இந்த தீப்பெட்டிகளின் தனித்துவத்தை உலகம் முழுவதும் அறிய செய்யவும், விற்பனையை அதிகரிக்கவும் MSME துறையின் சார்பில் ஆல் இந்தியா சேம்பர் ஆப்மேட்ச் பேக்டரி - சிவகாசி, தமிழ்நாடு சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம் - சிவகாசி ஆகியவற்றிற்கு புவிசார் குறியீடு பெற ஆலோசனைகள் வழங்கப்பட்டு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இதற்கான செலவினத்தில் 50 சதவிகிதத் தொகையை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் மூலம் மானியமாக வழங்கப்படும் என அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் சங்க உறுப்பினர்கள் தீப்பெட்டிக்கு புவிசார் குறியீடு பெற அவர்கள் ஆர்வம் காட்டவில்லை.*

**நடவடிக்கை எடுக்கப்படும்!**

*மேலும், சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யபடும் தீப்பெட்டி தோன்றியதற்கான வரலாற்று ஆவணங்கள் ஏதும் இது வரை கிடைக்க பெறவில்லை. ஆவணங்கள் கிடைக்க பெறும் பட்சத்தில் புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தீப்பட்டி தொழில் குறித்த 100 ஆண்டு ஆவணங்களை முறைப்படுத்தி வழங்கும் பட்சத்தில் புவிசார் குறியீடு பெற பரிசீலனை செய்யப்படும் .*


*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளக்கமளித்தார்.*

---

### கார்ல் மார்க்சுக்கு திருவுருவச் சிலை! மூக்கையா தேவருக்கு மணிமண்டபம்!

# நாளும் நல்லது செய்யும் முதலமைச்சர் - இன்னும் இன்னும் உயர்கிறார்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!





தமிழ்நாட்டு அரசுக்கும்
முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும்
உலகத்
தொழிலாளர்களின் சார்பிலும்
ஒடுக்கப்பட்ட
கல்வி மறுக்கப்பட்ட
மக்களின் சார்பிலும்
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்

மதங்களைத் தாண்டி
மதம் அல்லாத
ஓர் உழைக்கும் மதத்தை நிறுவிய
மாமேதை கார்ல் மார்க்சுக்கு
உண்டாக்கப்படும் உருவச்சிலை
வேர்வைக்கு எழுப்பப்படும்
வெற்றிச் சின்னமாகும்

பி.கே.மூக்கையாத்தேவருக்கு
எழுப்பப்படும் மணிமண்டபம்
நாங்கள்
குற்றப் பரம்பரையல்ல
கொற்றப் பரம்பரை என்று
குன்றின்மேல் நின்றுகூவும்
பிரமலைக் கள்ளர்களின்
பிரகடனமாகும்

நாளும் நல்லதுசெய்யும்
முதலமைச்சர்
இந்த இரண்டு செயல்களாலும்
இன்னும் இன்னும் உயர்கிறார்

வரவேற்கிறேன்;
வாழ்த்துகிறேன்



கவிப்பேரரசு
**வைரமுத்து**